தினமலர்
சென்னை | வியாழன் | 10.10.2019

# ஜூனியர் ஓபன் தடகளம் செயின்ட் ஜோசப் வெற்றி



ஒட்டு மொத்த சாம்பியன் பட்டம் வென்ற, செயின்ட் ஜோசப் அகாடமி அணியினர்.

**சென்னை, அக். 10–**

தமிழ்நாடு தடகள சங்கம் சார்பில், மாநில ஜூனியர் ஓபன் தடகள சாம்பியன் போட்டி, ஈரோடு மாவட்ட தடகள சங்கம் ஒருங்கிணைப்பில், ஈரோடு, சத்தியமங்கலம் பகுதியில், 6ம் தேதி துவங்கியது.

இதில், ஓட்டப்பந்தயம், நீளம், உயரம் தாண்டுதல், குண்டு, வட்டு எறிதல் உள்ளிட்ட போட்டிகள் நடந்தன. 14, 16, 18 மற்றும் 20 வயதிற்கு உட்பட்ட இருபாலர் பிரிவிலும், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த, 3,800 வீரர் – வீராங்கனையர் பங்கேற்றனர். மூன்று நாட்கள் நடந்த இப்போட்டிகள், நேற்று முன்தினம் நிறைவு பெற்றன.

இதில், இருபாலர் பிரிவிலும், ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை, செயின்ட் ஜோசப் அகாடமியும், இரண்டாம் இடத்தை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அணியும் பெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு, கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

101019